## இன்று தொடங்குகிறது!

# 'வெல்லும் தமிழ்ப் பெண்கள் - வீடு வீடாகப் பரப்புரை'

## மார்ச் 8 – வரை நடைபெறுகிறது!

2026 ஜனவரி 13 அன்று சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கத்தில் நடைபெற்ற "தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் '**வெல்லும் தமிழ்ப் பெண்கள் வீடு வீடாகப் பரப்புரை**' நடத்திட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

'திராவிட மாடல்' அரசு அமைந்த பிறகு பெண்களுக்கான '**கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்**' - '**விடியல் பயணம்**' - '**தோழி விடுதிகள்**' - '**புதுமை பெண் திட்டம்**' உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, மகளிருக்கான ஆட்சியென நடைபெற்று வருகிறது. நமது சாதனைத் திட்டங்களால் பெண்கள் வெல்லும் தமிழ்ப் பெண்களாக உயர்ந்துள்ளனர். பெண்கள் பயனாளிகள் மட்டுமல்ல, மாநில வளர்ச்சியின் பங்குதாரர்கள் என்ற சீரிய சிந்தனையுடன் செயலாற்றும் 'திராவிட மாடல் அரசு' நிறைவேற்றியுள்ள நலத்திட்டங்களையும் - 'பெண்களின் முன்னேற்றமே தமிழ்ச் சமூகத்தின் முன்னேற்றம்' எனும் கொள்கை உறுதியுடன் பெண்களுக்கான எண்ணற்ற பல திட்டங்களையும் – சாதனைகளையும் ஒவ்வொரு வீட்டிலும் உள்ள மகளிரிடம் எடுத்து சென்று சேர்ப்பதே இப்பரப்புரையின் நோக்கமாக இருக்க வேண்டும்.

இப்பரப்புரையை, வீடு வீடாகச் சென்று மேற்கொள்ளும் விதமாக தி.மு.கழகத்தின் சார்பில் ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் மாவட்டச் செயலாளர்களால் வழங்கப்பட்டுள்ள பட்டியலின் அடிப்படையில், 10 மகளிரை கொண்ட குழு உருவாக்கப்பட்டுள்ளது. அக்குழுவின் சார்பில் ஒரு உறுப்பினர் வீதம் தேர்வு செய்யப்பட்ட தொகுதி அளவிலான பயிற்சிக் கூட்டங்களை நடத்திட வேண்டும். "வெல்லும் தமிழ்ப் பெண்கள்" பரப்புரைக்கான சட்டமன்றத் தொகுதி வாரியான பயிற்சிக் கூட்டத்தை வரும் பிப்ரவரி 20, 21 மற்றும் 22-ஆம் தேதிகளுக்குள் அனைத்து தொகுதிகளிலும் நடத்தி முடித்திட வேண்டும்.

இப்பயிற்சியை, சட்டமன்றத் தொகுதி மகளிர் அணி பொறுப்பாளர்கள் வழங்குவர். பயிற்சிக் கூட்டத்தில் வெல்லும் தமிழ்ப் பெண்கள் பரப்புரை பற்றிய முழு பயிற்சியும் வாக்குச்சாவடி அளவிலான மகளிர் குழு பொறுப்பாளர்களுக்கு அளிக்கப்படும். அதன் பிறகு அவர்கள் ஒவ்வொரு வாக்குச்சாவடி யிலும் உள்ள இதர உறுப்பினர்களுக்கு பயிற்சி அளித்து பரப்புரையைத் தொடங்கிட வேண்டும்.

தேர்தலை காரணமாக வைத்து, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தையே முடக்குவதற்கான ஒன்றிய பா.ஜ.க. - அடிமை அ.தி.மு.க.வின் சூழ்ச்சிகளை முறியடித்து, " நீ ஆயிரம் ரூபாயை நிறுத்த முயற்சித்தால், நான் என் மக்களுக்கு ரூபாய் ஐந்தாயிரமாக தருவேன்" என சூளுரைத்து பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் ஆகிய மூன்று மாதங்களுக்கான தொகையினை முன்பணமாக ரூ.3000/, கோடைக் கால சிறப்புத் தொகுப்பு ரூ.2,000/ என மொத்தம் ரூ.5000/த்தினை தமிழ்நாட்டு பெண்களுக்கு வழங்கிய திராவிட மாடல் அரசின் சாதனைகளையும் வீடு வீடாக எடுத்துச் சொல்ல வேண்டும். அதுமட்டுமின்றி, 'திராவிடமாடல் 2.0' ஆட்சியில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை மாதம் ரூ.2,000/ மாக உயர்த்தி வழங்கப்படும் என்ற எனது உறுதிமொழியையும், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை தடையின்றி தொடர, கழக ஆட்சி தொடர்வது அவசியம் என்பதையும் மகளிர்க்கு உணர்த்திட வேண்டும்.

**இன்று (பிப்ரவரி 23) முதல் "வெல்லும் தமிழ்பெண்கள் - வீடு வீடாகப் பரப்புரை"** தொடங்கி, உலக மகளிர் தினமான மார்ச் 8-ஆம் தேதிக்குள் அனைத்து வீடுகளையும் சென்றடையும் வகையில் சிறப்பாக நடத்திட வேண்டும்.

கழகத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க கழகத்தின் வெற்றியை உறுதி செய்து மீண்டும் தி.மு.கழகத்தை ஆட்சிக் கட்டிலில் அமர்த்திட புறப்பட்டுவிட்டது இந்த ஸ்டாலினின் மகளிர் படை என இப்பரப்புரை சிறப்புடன் அமைந்திட வேண்டும்.

வெல்லும் தமிழ்ப் பெண்கள் பரப்புரைக்கான அனைத்து ஏற்பாடுகளையும் மண்டல பொறுப்பாளர்கள் - பொறுப்பு அமைச்சர்கள் - மாவட்டக் கழகச் செயலாளர்/பொறுப்பாளர்கள் செய்துதர வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

**மு.க.ஸ்டாலின்**
தலைவர்,
தி.மு.க.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18


## மக்களுக்குக் கொடுத்தால் அது தி.மு.க. அரசு!

# மக்களிடமிருந்து எடுத்துக்கொண்டால் அது ஒன்றிய பா.ஜ.க. அரசு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைத்தளப் பதிவு!

**சென்னை, பிப்.23- மக்களுக்கு கொடுத்தால் அது தி.மு.க. அரசு, மக்களிடமிருந்து எடுத்துக்கொண்டால் அது ஒன்றிய பா.ஜ.க. அரசு என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.**

மதுரையில் நடைபெற்ற தி.மு.க. தெற்கு மண்டல வாக்குச்சா வடிக் குழு பயிற்சி மாநாட்டு உரையை சுட்டிக்காட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், மக்களுக்கு கொடுத்தால் அது தி.மு.க. அரசு, மக்களிடமிருந்து எடுத்தால் அது ஒன்றிய பா.ஜ.க. அரசு என்று கூறியுள்ளார். திராவிட மாடல் அரசுக்கும், தமிழ்நாட்டில் டப்பா எஞ்சினை ஓட்ட நினைக்கும் பா.ஜ.க. அரசுக்குமான வேறுபாடு இதுதான்! என்றும் முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.



### தூத்துக்குடி விமான நிலையத்திற்கு நாளை வருகை தரும்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

## தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் கீதாஜீவன் அறிக்கை!



தூத்துக்குடி, பிப். 23-

தூத்துக்குடி விமான நிலையத்திற்கு நாளை (24 ஆம் தேதி) வருகை தரும் திமுக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்படும் என்று மாவட்ட கழக செயலாளரும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சருமான பெ. கீதாஜீவன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

கன்னியாகுமரி மாவட்டத்தில் வருகின்ற 24, 25 ஆம் தேதிகளில் நடைபெற உள்ள அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குதல், முடிவுற்ற பணிகளை துவக்கி வைத்தல், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுதல் மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக திமுக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் வருகை தர உள்ளார். அதன்படி நாளை (24ஆம் தேதி) காலை 10 மணி அளவில் தூத்துக்குடி விமான நிலையத்திற்கு வருகை தரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக சார்பில் உற்சாக வரவேற்பு வழங்கப்பட உள்ளது.

இந்நிகழ்ச்சியில் மாநில மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வட்டக் கழக செயலாளர்கள் நிர்வாகிகள், சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மக்கள் பிரதிநிதிகள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், கிளைச் செயலாளர்கள் நிர்வாகிகள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள், பூத் டிஜிட்டல் முகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள் மற்றும் கழக முன்னோடிகள், தொண்டர்கள், பொதுமக்கள் திரளாக பங்கேற்க வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சட்டமன்றத் தேர்தல் :

# 3வது நாளாக தி.மு.க. விருப்ப மனு விநியோகம்!

## அண்ணா அறிவாலயத்தில் கழகத்தினர் குவிந்தனர்!

சென்னை, பிப். 23-

சட்டசபை தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிடுபவர்களுக்கான விருப்ப மனு விநியோகம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் 20.2.2026 அன்று தொடங்கியது. மூன்றாவது நாளாக நேற்று (22.2.2026) கழக நிர்வாகிகள், தொண்டர்கள் என ஏராளமானோர் ஆர்வமுடன் விருப்ப மனுக்களை பெற்றனர்.

தமிழக சட்டப்பேரவை தேர்தல் ஏப்ரல் மாதத்தில் நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் தி.மு.க. தலைமையில் மெகா கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது. இந்த கூட்டணியில் புதிதாக தே.மு.தி.க. இடம் பெற்றுள்ளது. தொடர்ந்து கூட்டணி கட்சிகளுடன் தி.மு.க. தொகுதிப் பங்கீடு குறித்து அதிகாரப்பூர்வ பேச்சுவார்த்தையை தொடங்கி உள்ளது.





இந்த நிலையில் தி.மு.க. சார்பில் போட்டியிட விரும்புகிறவர்களிடம் இருந்து விருப்ப மனுக்கள் விநியோகம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் 20ஆம் தேதி அன்று தொடங்கியது. விருப்பமனு விநியோகத்தை கழக செய்தித் தொடர்புக் குழுத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், துணை அமைப்புச் செயலாளர் ஆஸ்டின், தலைமை நிலையச் செயலாளர்கள் துறைமுகம் காஜா, பூச்சி எஸ்.முருகன் உள்ளிட்ட தலைமைக் கழக நிர்வாகிகள் தொடங்கி வைத்தனர்.

தற்போது விருப்ப மனுக்களைப் பொறுத்தவரையில் 234 தொகுதி களுக்கும் பெறப்படுகிறது.

இதே போன்று, தமிழகம் முழுவதும் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஏராளமான தி.மு.க.. நிர்வாகிகள், தொண்டர்கள் திரளாக வந்து திரண்டு விருப்ப மனுக்களை வாங்கிச் செல்கின்றனர். ஏராளமானோர் பூர்த்தி செய்த விருப்ப மனுக்களையும் தாக்கல் செய்தனர். விருப்ப மனு விநியோகம் வருகிற மார்ச் 2ஆம் தேதி வரை நடைபெறுகிறது.